ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1907/52 - 2015 මාර්තු මස 27 වැනි සිකුරාදා - 2015.03.27

1907/52 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது குறிப்பு இல.:அநு/13/5/1/9/1

பிரதேச செயலாளர் குறிப்பு இல.: எல்டீ/05/2008 எச்டபிள்யூ/207.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக் கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:-**

அநுராதபுரம் மாவட்டத்தில், தலாவ பிரதேச செயலாளர் பிரிவில், நுவரகம் பலாத்த சிறு பிரிவில் உள்ள, இஹல தலாவ, மொறகொட கிராமங்களில் அமைந்துள்ள, நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட 19.10.2011 ஆம் திகதிய, இறுதிக் கிராம வரைபட இல. 302, பிற்சேர்க்கை இல. 22 தாள் இல. 28 - ஆரம்ப வரைபட இல. அநு/மே/4/ஆர்டீஏ/ரீஎல்டபிள்யூ, 08.12.2014 ஆம் திகதிய இறுதிக் கிராம வரைபட இல. 302, பிற்சேர்க்கை இல. 13, தாள் இல.19 மற்றும் ஆரம்ப வரைபடத்தில் காட்டப் பட்டுள்ள சுமார் 0.0311 ஹெக்டயார் மொத்த விஸ்தீரண முடைய காணித்துண்டுகளின் மேலதிக விபரங்கள் பின்வரு மாறு:-

1. **துண்டு இல. -** இ. கி. வ. 302/900

காணியின் பெயர்: வீதிக்கு ஒதுக்கப்பட்டது; உரிமை கோருபவர்: அரசு;

2. **துண்டு இல. -** இ. கி. வ. 302/936

காணியின் பெயர்: வீதி (வீதி அபிவிருத்தி அதிகாரசபை) ; உரிமை கோருபவர்: அரசு;

3. **துண்டு இல. -** இ. கி. வ. 302/15$^{G}$

காணியின் பெயர்: வீதி (வீதி அபிவிருத்தி அதிகாரசபை) ; உரிமை கோருபவர்: அரசு;

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2015ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 27ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு தலாவ பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2015ஆம் வருடம் ஏப்பிறல் மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப் பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படு கின்றனர்.

சந்தியா என். ஜீ. அபேசேகர,
பிரதேச செயலாளர்,
தலாவ.

பிரதேச செயலகம்,
தலாவ.
2015, மாச்சு 25.

4 - 425

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.